# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

## 1985 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1985, ஏப்பிரல் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1985, ஏப்பிரல் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 60*

## 1985 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

[1985, ஏப்றில் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 16/84

திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

" திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழகம் " என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இலங்கையில் திவிதுர என்னுமிடத்தில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருக்கின்றதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் அது தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1985 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழக (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், இதனகத்துப்பின்னர் " கழகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும் திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழகத்தில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழகம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறுவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். திவிதுர உத்தர பப்பதாராம விகாரை அபிவிருத்திக் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) திவிதுர உத்தர பப்பதாராம விகாரையை முகாமைசெய்தலும், அபிவிருத்திசெய்தலும், பேணிவருதலும் ;

எ 075171—2,790 (02/84)

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் தாபிக்கப்படக்கூடியவையான கல்விசார் நிறுவனங்களையும் சமய நிறுவனங்களையும் முகாமைசெய்தலும் பேணிவருதலும்;

(இ) பௌத்தத்தையும், பௌத்த பண்பாட்டையும் அல்லது சிங்கள நாகரீகத்தையும் பரப்புதற்கான செயற்பாடுகளை மேம்படுத்துதல்;

(ஈ) பௌத்தத்தின் திடநிலைக்கு உகந்தவையான வழிவகைகளை எடுத்தல்;

(உ) தேசிய, சமய, சமூக நலனை மேம்படுத்துவதற்காக பிரச்சாரங்களை ஆரம்பித்தலும் கொண்டுநடாத்துதலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக நேரடியாகவோ அல்லது வேறு ஒழுங்கமைப்புக்களின் கூட்டுழைப்புடனோ நிறுவனங்களைத் தாபித்துப் பேணுதல்;

(எ) கூட்டுத்தாபனத்தின் இணை ஒழுங்கமைப்பொன்றாக திவிதுர சமூக சேவை சங்கத்தை முகாமை செய்தலும் பேணிவருதலும்; அத்துடன்

(ஏ) மேற்சொல்லப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கென பிரிவேனையொன்றைத் தாபித்துப் பேணுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புக்களையும் நன்கொடைகளையும் பெறவும், அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றுக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய பதவிதாங்குநர்களையும் வேறு ஆட்களையும் கொண்டமைந்த நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கும் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப் பெறுதல், விலக்குதல் என்பவற்றுக்காகவும், பதவிதாங்குநர்களையும்,

நிறைவேற்றுக் குழுவையும் தெரிவுசெய்வதற்காகவும், பதவிதாங்குநர்களினதும், நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், பொதுவில் வேறுவகையாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அவை, அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேபோன்ற முறையிலும் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தொழுதல் வேண்டும்.

7. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் கழகத்திற்குள்ள எல்லாத்தனிசுகளும் பொறுப்புகளும், கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் கழகத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், கழகத்துக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும், கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கழகத்தினால் செலுத்தப்படற்பாலனவான அல்லது கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான தனிசுகள்.*

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவரினதும் ஒன்றில் செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அத்தகைய உறுப்பினர்கள், அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.*

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.